DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 174/ 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 8 |
| Name | திரு. பட்டாணி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 09-06-2026.(நேரம்: 12.55PM )**

**முதல்விசாரணை**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்று கதற்போது திருநெல்வேலி மாவட்டம் பாயைங்கோட்டையில் விஏம் சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன்.,

2.இதற்கு முன்பாக ஏரல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 07.09.2019 ஆம் தேதி 17.15 மணிக்கு பயிற்சி உதவி ஆய்வாளர் திரு. முத்துவீரப்பன் நிலைய உத்தரவு படி நிலைய குற்ற எண் 160/2019 சட்டபிரிவு 304(ஏ) இதச வாக பதிவு செய்த வழக்கை விசாரணைக்கு வேண்டி எனது வசம் ஒப்படைத்தார்,

3. நான் வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 07.07.2019 ஆம் தேதி சம்பவ இடமான பன்னைவிளையில் உள்ள வளைவு ரோட்டிற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பெரியசாமி மற்றும் தினகரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார்செய்தேன். **அந்த பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 6,7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**.

4. பின்பு சாட்சிகள் செந்தில்குமார், செல்வம், பெரியசாமி, தினகரன் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்பு 08.07.2019 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு TKMCH சவகிடங்கில் வைத்து இவ்வழக்கில் இறந்துபோன ரவி என்ற ரவிகுமார் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்களை அழைத்து சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு **பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரதே விசாரணை அறிக்கை அசாஆ 8 ஆக –குறியீடு செய்யப்படுகிறது (குவிமுச 294(3) ன் படி)**

6.பின்பு மேற்படி பிரேதத்தை ஏரல் காவல் நிலைய தலைமை காவலர் 1906 திரு.கருவேலராஜ் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பி TKMCH சட்டம் சார்ந்த அரசு மருத்துவர் திரு.மதன் என்பவரிடம் ஒப்படைக்கவேண்டி அனுப்பிவைத்தேன்.

7. பின்னர் சாட்சிகள் வைணபெருமாள், பாண்டியன், மற்றும் தலைமை காவலர் கருவேலராஜ் , பயிற்சி உதவி ஆய்வாளர் திரு. முத்துவீரப்பன் அவர்களை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

8. பின்பு 08.09.2019 ஆம் தேதி இந்த வழக்கின் எதிரி ஜெபதுரை என்பவரை 11.00 மணிக்கு மங்களகுறிச்சி பஸ் ஸ்டாப்பில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து தக்க ஜாமின்தார்கள் முன்னிலையில் விடுவித்தேன்.

9. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN69 AB 7381 என்ற மகேந்திர மேக்சிகேப் என்ற நான்கு சக்கர வாகனத்தை விபத்து ஆய்வு செய்வதற்கு வேண்டி திருச்செந்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு உலகநாதன் என்பவரிடம் ஒப்படைத்து மேற்படி வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வுசான்று பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த TN69 AB 7381 என்ற மகேந்திர மேக்சிகேப் என்ற நான்கு சக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு சான்று அசாஆ 9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது ( குவிமுச 294(3)ன்படி)**

10. பின்பு 23.10.2019 ஆம் தேதி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN69 AB 0097 என்ற யமகா என்ற இரு சக்கர வாகனத்தை விபத்து ஆய்வு செய்வதற்கு வேண்டி திருச்செந்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு ராஜேஸ் என்பவரிடம் ஒப்படைத்து மேற்படி இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வுசான்று பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த TN69 AB 0097 என்ற யமகா என்ற இரு சக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வு சான்று அசாஆ 10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது ( குவிமுச 294(3)ன்படி)**

11. பின்பு இவ்வழக்கில் இறந்துபோன ரவி என்ற ரவிகுமார் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த TKMCH மருத்துவர் திரு. மதன் பாண்டியன் என்பவரிடம் பிரேத பரிசோதனை சான்று பெற்றுவிசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பிரேத பரிசோதனை சான்று அசாஆ 11 ஆக குறியீடுசெய்யப்படுகிறது(குவிமுச 294(3) ன் படி)**

12.இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்துக்கொண்டு 28.10.2019 ஆம் தேதி எதிரி மீது 304(ஏ) இதச வாக இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றம் அனுப்பிவைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை(நேரம் 01.05PM)**

1.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு தூத்துக்குடி செல்லும் மெயின்ரோடு என்றால் சரிதான்.

2.அந்த மெயின் ரோட்டில் ஒருவாகனம் வரும்போது அதற்கு எதிரே வரும் வாகனம் மெதுவாகதான் செல்லமுடியும் என்றால் சரியல்ல.

3.சம்பவம் நடந்த இடம் என்பது கடைகள் அதிகம் உள்ள இடம் என்று சொன்னால் சரிதான். ஒரே ஒருகடை மற்றும் தான் உள்ளது. அது குடியிருப்பு பகுதியாகும்.

4. மேற்கண்ட கடை வெல்டிங் ஓர்க் ஸாப்பாக உள்ளதால் அதில் உள்ள வேலை பார்க்கும் நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்டதா என்றால் கேட்டுப்பார்த்தேன் யாரும் சாட்சி சொல்ல முன்வரவில்லை.

5. சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து புகார் மனு பெறப்பட்டது என்றால் 1 மணி நேரம் கழித்து புகார் மனு பெறப்பட்டது.

6.காவல் நிலையத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கு நடுவே எவ்வளவு தூரம் என்று கேட்டால் 6 கிமீ தூரம்.

7.நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

8.வழக்கின் புகார்தாரரின் சகோதரர் தான் வேகமாக வண்டியை ஓட்டி வந்து கீழே விழுந்து விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

9. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.